# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,066 — 1934 ம் ௵ ஆடிமீ 27 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

**1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கத் திருஸ்தல யாத்திரைச் சட்டம்.**

*முன்னேஸ்வரக் கோவில் திருவிழா சம்பந்தமாக உண்டாக்கப்பட்ட ஒழுகக விதிகள்.*

உத்தம தேசாதிபதியவர்களால் " திருஸ்தல யாத்திரைச் சட்டம்" எனப் பெயர் பூண்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 1 ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்ட ஒழுக்க விதிகள்.

உத்தமனுரவர்கள் கட்டளைப்படி,

டீ. பீ. ஜயதிலக்க,
கௌரவ உள்நாட்டு அரசியல் மந்திரியவர்கள்.

உள்நாட்டு அரசியல் மந்திரியவர்கள் கந்தோர்,
கொழும்பு, 1934 ம் ௵ ஆடிமீ 11 ௳.

### மேற்குறித்த ஒழுக்க விதிகள்.

1. இந்த விதிகளில் "வாடியின் இடப்பரப்பு" என்ற வசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள் ளடங்கிய விசாலத்தைக் கருதும்.

"உதவி அரசாட்சி ஏசன்றர்" என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிககுகளின் உதவி அரசாட்சி ஏசன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளையின்படி வாடி வீடு கட்டக்கூடாதென்று விலக்கி வைக்கப்பட்ட வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள எந்த இடத்திலும் ஒருவரும் வாடிவீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினுல் அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறு இடங்களில் ஒருவரும் மலசலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்து வைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும் தண்ணீர்ப் பதார்த்தமான அல்லது கட்டிப் பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையையும் போடப்படாது.

5. (*a*) வாடிக்குரிய இடப்பரப்பில் ஆடுமாடு வைத்திருக்கப்படாது. உதவி அரசாட்சி ஏசன்றரால் ஆடுமாடு கட்டுவதற்கு அனுமதி கொடுககப்பட்ட ஒரு இடத்தில் அல்லது ஒரு மாட்டுக்காலையாகப் புறம்பாக நியமிக்கப்பட்ட ஒரு இடத்தில் ஒழிய வாடிக்குரிய இடப்பரப்புக்குச் சமீபமாக ஆடுமாடு வைத்திருக்கப்படாது.

(*b*) ஆடுமாடுகளைத் தன்பொறுப்பில் வைத்திருப்பவன் வாடிக்குச்சேர்ந்த இடப்பரப்பில் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப்பட்ட இடத்தில் போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடுமாடுகள் நிற்கும இடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரப்புக்குள் விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடுகளும் ஈ இலையான விழாமலும் தூசபடியாமலும் இருக்கும்படி (*a*) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால் மூடிவைக்கப்படல் வேண்டும். அல்லது (*b*) கண்ணடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும் அல்லது (*c*) வைத்திய உத்தியோகஸ்தரால் வாடிவீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார உத்தியோகஸ்தரால் அனுமதிக்கப்பட்ட வேறு எவ்விதமான மூடிப் பெட்டிகளுக்குள்ளும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுத்தத்துக்குக் கேடு வருவிக்கத்தக்க ஆட்களுக்கும் தொத்துவியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப்பரப்புககுட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளைநோய் உண்டாகக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தலயாத்திரைககாரரை, யாத்திரை ஸ்தலத்தைவிட்டுப்போகும்படி செய்தும் அவர்கள் அங்கிருந்து எப்பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டுமென்றும் விதிக்கலாம்.

9. (*a*) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்து வியாதியுள்ள ஒவ்வொருவரும் அல்லது (*b*) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவனுடன் அவனுக்கு அவ்வியாதி உண்டென அறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச் சங்கதியை டாக்தருக் கல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்.

10. வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தையல்லது கிணற்றை ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாகவைத்து அதைக்குறித்து ஒரு விளம்பரம் அவ்விடத்தில் வெளியாக வைக்கப்பட்டிருந்தால் அக்குளத்தை

யல்லது அக்கிணற்றை அது புறம்பாக வைக்கப்பட்ட நோக்கத்துக்கே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசண்டரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் பான்போறனை சோடாமோள் அல்லது காலைகள் வாடியின் இடப்பரப்புகளுள் வைக்கப்படாடது. அவ் லைசன்ஸ் செலவின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மற்றையதெருக்களின் எல்லைக்குட் செல்லக்கூடியதாய் எக்கட்டடத்தைப் பெருப்பிக்கவும் படாது.

13. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து ஏற்கனவே அனுமதிச்சீட்டு அல்லது லைசென்ஸ் பெறாமல் ஒருவராகிலும் வாடியின் இடப்பரப்புக்குள் அல்லது அவ்விடப்பரப்பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துக்குள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விடவேனும்படாது.

14. உதவி அரசாட்சி ஏசன்றரின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவராகிலும் ஆடுமாடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைத்திருக்குமிடங்களில் ஆடுமாடு அடிப்போர் அவ்விடத்தை துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடைவர்களாயிருத்தல் வேண்டும்.

இடாப்பு.

முன்னேஸ்வரக்கோயில் திருவிழா வாடி எல்லை.

வடக்கு:—பாலைக்குளம், கொஹொம்பகஸ்பிற்றிய; முத்தேறந்தளுவ; முனனேஸ்வரம் குளம்.

தெற்கு:—முன்னேஸ்வரம் வயல்; நல்லநாயகன் குளம்.

கிழக்கு:—முன்னேஸ்வரம் குளம்: சிலாபத்திலிருந்து குருனகலுக்குப் போகும் பெருவழி; நல்லநாயகன் குளம்.

மேற்கு:—முன்னேஸ்வரம வயல்; சிலாபத்திலிருந்து குருனகலுக்குப் போகும் பெருவழி, பாலைக்குளம்.

---

முன்னேஸ்வரம் பண்டிகை, 1934 ம் ஆண்டு.

1. 1934 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ந் திகதிக்கும் ஆவணி மாதம் 24 ந் திகதிக்குமிடையில், மோட்டார் அல்லது, மற்ற வண்டிகளை, சலாபம் ஹெட்டிப்பளை ரோட்டில், ஒன்றிற்கும், ஒன்றரைக் கட்டைககு மிடையில், எவ்விடத்திலேனும் தரிபடுத்த, விடப்படமாட்டாது.

2. சலாபப் பக்கங்களிலிருந்து பண்டிகைக்குச் சமுகங் கொடுப்போரின் மோட்டார் வண்டிகளையும் மற்ற வண்டிகளையும், ஒன்றுங்கட்டையிலிருக்கும் செக்குவற்றையிலும், அதற்கெதிரேயுள்ள நககாவற்றைக் காணியிலும் தரிபடுத்தப்படும். ஹெட்டிப்பளைப் பக்கங்களிலிருந்து வருபவைகளை ஒன்றரைக்கட்டை யடியில், மற்றப் போக்குவரத்தைத் தடைபண்ணுவண்ணம் ரோட்டின் பக்கத்தில் தரிபடுத்தப்படும்.

3. ஊர்வலத்தின் பொழுது, எல்லாப் போக்குவரவுகளையும், ஆவணி மாதம் 3 ந் திகதிக்கும் 19 ந் திகதிக்குமிடையில், மாலை 9 மணியிலிருந்து 12 மணி வரையிலும், காலை 4 மணியிலிருந்து 8 மணி வரையிலும், ஆவணி மாதம் 20 ந் திகதிககும் 24 ந் திகதிக்குமிடையில், பிற்பகல் 3 மணியிலிருந்து காலை 8 மணி வரையிலும் தரிபடுத்தப்படும்.

ஊர்வலம், சலாபம், ஹெட்டிப்பளை ரோட்டில் வந்துவிட்டால், ஹெட்டிப்பளையை நோக்கிச் செல்லவிரும்பும் எந்த வண்டிகளையும் ஆலமரத்தடியிலிருந்து, முன்னேஸ்வரம் கோவிலைச் சுற்றிப் போகும் "சேறகுலர்" ரோட்டிநெடுகேவயனுப்பப்படும், ஹெட்டிப்பளையிலிருந்து சலாபத்தை நோக்கிச்செல்லுபவைகளைப்பிரசித்த ரோட்டிலிருந்து, சேற்குலர் ரோட்டு, தொடுசகும், சமயத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பொலிஸ் இஸ்டேசன் கட்டப்பட்டிருக்கும் இடம் வரைக்கும் திருப்பியனுப்பப்படும்.

4. ஆவணி மாதம் 10 ந் திகதிக்கும் 24 ந திகதிக்குமிடையில் எல்லா மோட்டார் வண்டிகளும் ஒரு மணித்தியாலத்திற்கு 12 மயிலுக்கு மேற்படாத வேகத்தில் புத்தளம, சலாபம் ரோட்டுச் சந்தியிடையேயுள்ள சலாபம், ஹெட்டிப்பளை ரோட்டிலும் ஒன்றுங் கட்டையிலும் பிரயாணம் பண்ணலாம், ஒன்றிலும் ஒன்றரைக் கட்டையிலும், ஒரு மணித்தியாலத்திற்கு 4 மயிலுக்கு மேற்படாத வேகத்திலும் பிரயாணம் பண்ணலாம்.

ஏ. எஸ். பிலிப்ஸ்,
உதவிப் பொலிஸ் சுப்றின்டன், சலாபம்.

சிலாபம்,
1934 ம் ஹூ ஆடிமீ 20 ந திகதி.

---

காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 840 (நுவரெலியா).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விபரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோநதைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஹூ (ஜூலை) ஆடிமீ 27 ந் தேதியிலிருந்து மூன்று மாசகாலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுககப்படுகின்றது.

1934 ம் ஹூ (ஜூன்) ஆனிமீ 25 ந் தேதியலன்று நுவரெலியா கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். எச். பௌற்,
உதவி அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் நுவரெலியா உதவி அரசாட்சி ஏஜன்ற் அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர்ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

(c) கீழ் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள் உள்ளனவும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட காணி அட்டவணையில் சேர்க்கப்படாததுமான காணித்துண்டுகள் இந்த அறிவித்தலில் காட்டப்படவில்லை. அப்போ்பட்ட காணித்துண்டுகளுக்குரிய உடந்தை உரித்து ஒன்றும் கவனிக்கப்பட மாட்டா.

அட்டவணை.

மத்திய மாகாணம் நுவரெலியா டிஸ்திறிக் கொத்தமல்லி பிரிவு பல்லேபெள கோறளையில் உள்ள கடடொற கிராமத்திலிருக்கின்றனவும் கீழே குறிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள் வருவனவுமான கீழ் சொல்லப்படுங் காணித் துண்டுகள்:—

எல்லைகளாவன: வடக்கு: டறகல் எல, உரிமைப்படம் 274,383, முடிக்குரியதென உரித்தாடப்படும் நறன்ககமட என்னும் மறுநாமங்கொண்ட கொறேகின (பிரதமபடம் 7,849 துண்டு 1), முடிக்குரியதென உரித்தாடப்படும் நறன்ககமடகும்புறே பிரதமபடம் 6,916 துண்டு U 915), முடிக்குரியதென் உரித்தாடப்படும் நறன்ககமடகும்புறே (பிரதமபடம் 7,849 துண்டு 2), முடிக்குரியதென உரித்தாடப்படும் நறன்ககமடக்கும்புறே (பிரதமபடம் 5,916 துண்டு S 915), உரிமைப்படம் 274,383 பற்றவத்தை எல, உரிமைப்படங்கள் 141,014, 141,015, 48,971 வும்;

கிழக்கு: முடிக்குரியதென உரித்தாடப்படும் நிலிவெல்கல பொத்தே ரூக்கலான (பிரதமபடம் 3,427 துண்டு 9,485⅓), முடிக்குரியதென உரிததாடப்படும் இலு கேனபத்தன, முடிக்குரியதென உரித்தாடப்படும் உடத்தென்னபத்தன, முடிக்குரியதென உரித்தாடப்படும் அலவத்தேகம்மன, ஏ. ஜி. புஞ்சி மெனிக்காவாலும் பிறராலும் உரித்தாடப்படும் கலன்டகேன, டி. ஜி. கின் அப்புவாலும் பிறராலும் உரித்தாடப்படும் கலனடவத்தைபேரிய, டி. ஜி. முடியான்சேயாலும் பிறராலும் உரித்தாடப்படும் கலன்டவத்தைபேரிய, எச். ஜி. றம்மல்காமியாலும் பிறராலும் உரித்தாடப்படும் இடமய பேரியவத்தை, ஏ. ஜி. றம்மல்காமியால் உரித்தாடப்படும் தித்தவறகவபெத்தேபேரிய, பலகெதற சியத்துவால் உரிததாடப்படும் றுப்பேபேரிய புஞ்சிறுலாவாலும் பிறராலும் உரித்தாடப்படும் றுப்பேகும்புறேகேன, பி. ஜி. சியாத்துவால் உரிததாடப்படும் றுப்பேகும்புறேபேரியே, ஏ. ஜி. றம்மல்காமியாலும் பிறராலும் உரித்தாடப்படும் கெல்வத்தேபேரிய, ஏ. ஜி. மெனிக்கெத்தனவாலும் பிறராலும் உரித்தாடப்படும் தல்ககவத்தேபேரிய;

தெற்கு: கடடொறஎல, கே. ஜி. முதலிகாமியாலும் பிறராலும் உரித்தாடப்படும் கலுகமுவகேவத்தை, வெல்லசாமியாலும் பிறராலும் உரித்தாடப்படும் மெதகல்கெல்லவத்தை, மலகண்டுற அந்திறிபெத்தஎல, கொத்தமல்லி கங்கை.

மேற்கு: தொறகல்எல.

பிரதமப்படத்து இல. A 122.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 1 | உலப்பனயகேமுகலான .. .. | 5 | 1 | 14 |
| 2 | இறதுல்பெத்தேபத்தன .. | 6 | 2 | 5 |
| 3 | இற்துலபெத்தேடெனிய .. | 0 | 0 | 16 |
| 4 | இற்துல்பெத்தேகெல .. .. | 2 | 1 | 10 |
| 5 | இற்துல்பெத்தேபத்தன .. .. | 2 | 2 | 31 |
| 6 | ஷை .. .. | 21 | 1 | 16 |
| 7 | டெமெற்றகஸ்தென்னேயும் கோற இராச்சிகே பத்தனவும் .. .. | 13 | 2 | 27 |
| 8 | பம்பெகும்புறேவத்தை .. | 0 | 1 | 17 |
| 9 | குறுண்டுகக்முலத்தென்ன .. | 0 | 2 | 16 |
| 10 | ஷை .. . | 0 | 0 | 16 |
| 11 | ஷை .. .. | 2 | 2 | 19 |
| 12 | ஷை .. .. | 2 | 0 | 17 |
| 13 | உலப்பனயகேமுகலான .. | 2 | 2 | 21 |
| 14 | கீனககமடகும்புறே .. .. | 1 | 2 | 23 |
| 15 | ஷை .. .. | 0 | 3 | 39 |
| 16 | கீனககமடகேன .. . | 0 | 1 | 12 |
| 17 | ககட்டககமட .. .. | 0 | 0 | 16 |
| 18 | ஷை .. .. | 0 | 0 | 24 |
| 19 | நாரன்ககமட .. .. | 0 | 1 | 0 |
| 20 | மெதலியவத்தை .. .. | 2 | 0 | 20 |
| 21 | கொறேகன்ன .. .. | 0 | 2 | 3 |
| 22 | ஷை .. .. | 2 | 0 | 31 |
| 23 | ஷை .. .. | 13 | 1 | 31 |
| 24 | பொல்ககொற்றுவே முக்கலானவும் அந்திறிபெத்தே மூக்கலானவும் .. | 5 | 1 | 5 |
| 25 | ஜயசேகரயகேலவலேபத்தன .. | 6 | 0 | 25 |
| 26 | ஜயசேகரயகேலவலே மூக்கலான .. | 2 | 1 | 37 |
| 29 | கொன ஆராச்சிகேதென்ன மூக்கலான .. | 0 | 3 | 36 |
| 30 | டெமற்றகஸ்தென்னேடெனிய .. | 0 | 0 | 12 |
| 31 | இனிமெதில்லேகமன .. .. | 2 | 2 | 30 |
| 32 | கோன ஆராச்சிகே தென்னவும் இனிமெதில்வேபத்தனவும் . .. | 18 | 2 | 25 |
| 33 | டெமற்றகஸ்தென்னவும் உடத்தென்னவும் .. .. | 17 | 0 | 7 |
| 34 | சாலனவத்தேபேரிய .. .. | 0 | 0 | 24 |
| 35 | ஷை .. .. | 0 | 2 | 7 |
| 36 | இடமெயயேபேரிய .. .. | 0 | 3 | 13 |
| 37 | தித்தவறகவவத்தேபேரிய .. | 0 | 0 | 24 |
| 38 | றுப்பேபேரிய .. | 0 | 0 | 13 |
| 39 | கரவககின்னவும் திவ்வியமலபிற்றியவும் | 3 | 0 | 20 |
| 40 | திவ்வியமலபிற்றிய .. .. | 0 | 1 | 1 |
| 41 | ஷை .. .. | 0 | 0 | 2 |
| 42 | கரவ்ககஹின்ன .. .. | 1 | 2 | 16 |
| 43 | ஷை .. .. | 0 | 3 | 10 |
| 44 | ஷை .. .. | 0 | 3 | 33 |
| 45 | ஷை .. .. | 9 | 1 | 30 |
| 46 | ஷை .. | 1 | 1 | 18 |
| 47 | ஷை .. .. | 0 | 2 | 38 |
| 48 | ஷை .. .. | 0 | 2 | 8 |
| 49 | ஷை .. .. | 3 | 2 | 8 |
| 50 | ஷை .. .. | 2 | 3 | 39 |
| 51 | கன்கனயகேனமுக்கலான .. | 0 | 0 | 14 |
| 52 | கன்கனயகேனபத்தனவும் கன்கனயகேன முக்கலானவும் .. .. | 1 | 0 | 21 |
| 53 | கன்சனயகேனபத்தன .. | 0 | 1 | 1 |
| 54 | கன்கனயகேனமுககலான .. | 0 | 3 | 4 |
| 55 | பொல்ககொட்டுவேலவல .. | 1 | 3 | 19 |
| 56 | ஹொறேகின்ன .. .. | 0 | 0 | 36 |
| 57 | பொல்ககொற்றுவெலவல | 0 | 2 | 26 |
| 58 | ஷை .. .. | 0 | 3 | 38 |
| 59 | வெலிகின்ன .. .. | 0 | 3 | 35 |
| 60 | ஷை . .. | 1 | 0 | 26 |
| 61 | ஷை .. .. | 0 | 1 | 14 |
| 62 | ஷை .. .. | 0 | 3 | 27 |
| 63 | ஹொறேகின்ன .. .. | 0 | 2 | 14 |
| 64 | ஷை .. .. | 0 | 0 | 4 |
| 65 | வெலிஹின்ன .. .. | 1 | 0 | 18 |
| 66 | ஷை .. .. | 0 | 0 | 11 |
| 67 | பொல்ககொற்றுவெலவல . | 1 | 0 | 0 |
| 68 | தொலபோவத்தேகின்ன ... | 0 | 0 | 19 |
| 69 | ஷை .. .. | 0 | 3 | 5 |
| 70 | ஷை .. .. | 0 | 3 | 11 |
| 71 | ஷை .. .. | 0 | 0 | 31 |
| 72 | ஷை .. .. | 0 | 1 | 3 |
| 73 | ஷை .. .. | 0 | 0 | 33 |
| 74 | ஷை .. .. | 0 | 3 | 39 |
| 75 | ஷை .. .. | 1 | 0 | 20 |
| 76 | ஹொறேஹின்னேமுக்கலான .. | 1 | 0 | 13 |

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 77 | ஹொறேஹின்ன .. .. | 0 | 3 | 25 |
| 78 | ஷை .. .. | 0 | 1 | 10 |
| 79 | ஷை .. .. | 0 | 0 | 35 |
| 80 | ஷை .. .. | 0 | 3 | 18 |
| 81 | ஷை .. .. | 0 | 3 | 29 |
| 82 | ஹொறேஹின்னபத்தனவும் கொறேகின்ன முக்கலனவும் .. .. | 0 | 3 | 30 |
| 83 | கொறேகின்ன .. .. | 0 | 2 | 20 |
| 84 | ஷை .. | 0 | 2 | 37 |
| 85 | ஷை .. | 0 | 2 | 29 |
| 86 | கொறேகின்னமுக்கலன .. | 2 | 3 | 36 |
| 87 | கொறேகின்ன .. .. | 0 | 3 | 30 |
| 88 | புனவககமுக்கலான .. | 1 | 0 | 30 |
| 89 | கொறேகின்ன .. .. | 0 | 3 | 24 |
| 90 | ஷை .. | 1 | 0 | 1 |
| 91 | ஷை .. .. | 0 | 1 | 18 |
| 92 | ஷை .. .. | 0 | 3 | 19 |
| 93 | ஷை .. .. | 0 | 3 | 8 |
| 94 | ஷை .. | 0 | 0 | 35 |
| 95 | ஷை .. .. | 0 | 2 | 33 |
| 96 | ஷை .. | 0 | 3 | 22 |
| 97 | ஷை .. .. | 0 | 3 | 19 |
| 98 | ஷை .. .. | 0 | 3 | 34 |
| 99 | ஷை .. .. | 0 | 3 | 11 |
| 100 | ஷை .. .. | 0 | 0 | 37 |
| 101 | ஷை .. .. | 0 | 0 | 34 |
| 102 | ஷை .. .. | 0 | 1 | 2 |
| 103 | ஷை .. .. | 0 | 0 | 38 |
| 104 | ஷை .. .. | 0 | 0 | 39 |
| 105 | ஷை .. .. | 0 | 0 | 39 |
| 106 | ஷை .. .. | 0 | 0 | 37 |
| 107 | ஷை .. .. | 1 | 0 | 2 |
| 108 | பொறேகின்னமுக்கலானவும் தன்திறியகமுவேமுக்கலானவும் .. | 9 | 2 | 3 |
| 109 | கொறேகின்ன .. .. | 0 | 0 | 38 |
| 110 | ஷை .. .. | 0 | 1 | 1 |
| 111 | ஷை .. .. | 0 | 0 | 39 |
| 112 | ஷை .. | 0 | 3 | 10 |
| 113 | ஷை .. .. | 0 | 1 | 0 |
| 114 | கொறேகின்னவும் புனவக்கமுக்கலானவும | 0 | 0 | 36 |
| 115 | ஷை .. .. | 0 | 3 | 37 |
| 116 | புனவக்கமுக்கலான .. .. | 0 | 0 | 30 |
| 117 | ஷை .. .. | 0 | 1 | 2 |
| 118 | ஷை .. .. | 0 | 1 | 0 |
| 119 | ஷை .. .. | 0 | 0 | 39 |
| 120 | ஷை .. .. | 0 | 1 | 1 |
| 121 | கொறேகின்னவும் புனவக்கமுக்கலானவும் | 0 | 3 | 33 |
| 122 | தொலொபோவத்தைகின்ன .. | 0 | 3 | 4 |
| 123 | தந்திறிகமுவ .. .. | 0 | 3 | 34 |
| 124 | புஜுவயததகமனவும் தந்திறிகமுவேமுக்கலானவும் .. .. | 11 | 1 | 24 |
| 125 | தொலேபோவத்தைகின்ன .. | 0 | 1 | 19 |
| 126 | ஷை .. .. | 1 | 1 | 6 |
| 127 | தொலொபோவத்தைகின்னகும்புற .. | 1 | 0 | 0 |
| 128 | பொல்ககொற்றுவேலவல .. | 0 | 0 | 36 |
| 129 | ஷை .. | 0 | 0 | 30 |
| 130 | கங்காநாயகேனமுக்கலானவும் பொல்ககொற்றுவேலவலவும் .. | 0 | 0 | 19 |
| 131 | ஷை .. .. | 0 | 2 | 1 |
| 132 | பொல்ககொற்றுவேலவல .. | 0 | 1 | 26 |
| 133 | ஷை .. .. | 0 | 0 | 36 |
| 134 | ஷை .. .. | 0 | 2 | 12 |
| 135 | ஷை .. .. | 0 | 0 | 8 |
| 136 | பொல்ககொற்றுவேல்வலவும் வெலிகின்னவும் .. | 0 | 1 | 19 |
| 137 | பொல்ககொற்றுவேலவல .. | 1 | 1 | 15 |
| 138 | ஷை .. .. | 0 | 2 | 36 |
| 139 | ஷை .. .. | 0 | 3 | 29 |
| 140 | ஷை .. .. | 0 | 0 | 28 |
| 141 | கங்காநாயகேனமுக்கலான .. | 1 | 3 | 9 |
| 142 | கங்காநாயகேனபத்தனவும் கங்காநாயகேனமுக்கலானவும் .. . | 1 | 1 | 1 |
| 143 | ஷை .. .. | 1 | 1 | 15 |
| 144 | ஷை .. | 0 | 0 | 31 |
| 145 | கங்காநாயகேனமுக்கலன .. | 1 | 0 | 14 |
| 146 | கங்காநாயகேனமுக்கலனவும் கங்காநாயகேனபத்தனவும் .. .. | 1 | 0 | 2 |
| 147 | ஷை .. .. | 1 | 0 | 0 |
| 148 | ஷை .. .. | 1 | 0 | 0 |
| 149 | கங்காநாயகேனகும்புற .. | 1 | 2 | 21 |

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|---|
| 150 | கங்காநாயகேன .. .. | 1 1 6 | 162 | கல்லல்லகேனவத்தை என்னும் மறுநாமங் கொண்ட மொனருன்தனகலமுல வத்தை .. .. | 0 0 12 |
| 151 | மெதகேகல்லேல்லவத்தை .. | 0 0 7 | 163 | கல்லல்லகேன என்னும் மறுநாமங் கொண்ட மொனருன்தனகலமுலவன | 0 0 22 |
| 152 | கங்காநாயகேனமுக்கலான .. | 0 0 25 | 164 | ஹமதியேகெலவத்தை .. .. | 0 1 3 |
| 153 | ஷை .. .. | 0 0 30 | 165 | ஷை .. .. | 1 0 19 |
| 154 | மொனருன்தனகலமுலனபத்தனவும் கங்காநாயகேனமுக்கலானவும் .. | 0 2 30 | 166 | வேவபென்திதென்னேகும்புற .. | 1 1 16 |
| 155 | கங்காநாயகேனமுக்கலானவும் கங்காநாய கேபத்தனவும் .. .. | 0 3 21 | 167 | ஷை .. .. | 1 0 22 |
| 156 | மெதகேகல்லேல்லவத்தை .. | 0 0 21 | 168 | வேவபென்திதென்ன .. .. | 0 0 16 |
| 157 | கங்காநாயகேனமுக்கலானவும் கங்காநாய கேனபத்தனவும் .. .. | 0 3 26 | 169 | ஷை .. .. | 0 0 8 |
| 158 | ஷை .. .. | 0 0 23 | 170 | திவ்வியமலபிற்றிய .. .. | 0 0 28 |
| 159 | மொனருன்தனனகலமுக்கலான .. | 0 0 33 | 171 | வேவபென்திதென்னேகெல .. | 0 0 30 |
| 160 | கருவ்கின்னேபத்தன .. . | 3 1 20 | | | |
| 161 | மொனருன்தனகலமுக்கலான .. | 1 0 31 | | | 263 0 1 |

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினால் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாட்சிமை தங்கிய தற்காலீக தேசாதிபதியவர்கள், கிறில்லப்பொனையில் ஜலதாரை மல ஜலம் வற்றடிக்கும் யந்திரஸ்தானமாகிய ஒரு பகிரங்கத் தேள்வைக்கு வேண்டியதான பின்சொல்லப்படும் காணிகளை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் :

பிரதமபடத்து இலக்கம் 20,206. நறஹென்பிட்டிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கிறில்லப்பொனை ரேட்டு வரிப்பண இலக்கங்கள் 25 உள்ள காணியின் ஒரு பகுதியும், 2 உள்ள காணியும் | 50 வருஷ தென்னமரங்கள் 67ம், 20 வருஷ தென்னமரங்கள் 21ம், 25 வருஷ கமுக மரங்கள் 35ம், 40 வருஷ பலாமரமொன்றும், 10 வருஷ திப்பிலிப் பனையொன்றும், 5 வருஷ விலிம்பி மரமொன்றும், 25 வருஷ திம்பிரிமர மொன்றும், 5 வருஷ சீதாமரங்களிரண்டும், 3 வருஷ இலந்தை மரமொன்றும், 2 வருஷ கொய்யாமரங்கள் 2ம், 1 வருஷ அரசமர மொன்றும், 8 மாச வாழைகுட்டிகள் 34 ம், தகர மண் மலங்களிக்குமிடம் 1ம், கிடுகுக் கொட்டில் 1ம், தகர அறையுள்ள கிடுகு மண்கட்டடமும், ஒரு கிணறுமுள்ள தோட்டம் | டபிள்யு. ஆர். டுடொலைக் கி. 29 கொற்றுரேட், பொறளை, ஸ்ரீமதி எம். ரேயிலர், கண்டி | 1 0 2·05 |
| 2 | வரிப்பண இலக்கம் 25 உள்ள காணியின் ஒரு பகுதி | 25 வருஷ கமுகமரங்கள் இரண்டுள்ள ஒவிதா | ஷை .. | 0 0 29·65 |

மேற்சொல்லப்பட்ட காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆண்டு (ஆகஸ்டு) ஆவணிமீ 20 ந் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கொழும்பு நகரசங்கக கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும், அவ்வுடந்தைகளுக்காக கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்றும் உறுதிகளாலும், பதிவு கொப்பிகளாலும் எனக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நகரசங்க கந்தோர்,
கொழும்பு, 1934 ம் ஹூ ஜூலைமீ 24 ந் திகதி.

டபிள்யு. எல். மேர்பி,
நகரசங்க சபாநாயகரும், கொழும்பு நகரதிகாரியும்.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு அரசாங்க கலவன் பாடசாலைக்கு வேண்டிய நிலையத்திற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னால் சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

படத்து இல. 945 ம் இலக்கக் கடைசிக் கிராமப்படத்தின் 1 ம் அநுபந்தம். குறிச்சி—வடமேல் மாகாணத்தில் குருணாக்கல் டிஸ்திறிக்கில் தம்பதெனி ஹற்பததுவில் மயுறுவதி கோறளையில் உள்ள வவகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 2B1 | ஹீனற்றிபிறதியவத்த .. | தோட்டம் .. | வவகமவைச்சேர்ந்த கே. பி. டி. பொடியாவும் மறுபேரும் | 0 2 9·7 |
| 2C | ஷை .. | ஷை .. | வவகமவைச்சேர்ந்த ஏ. பி. உக்குவாவும் மறுபேரும் | 0 1 37·8 |
| 2D | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 5·6 |
| 3B1 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 2·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1934 ம் ஹூ (ஆகஸ்ட்) ஆவணி மாசம் 21 ந் தேதியிலன்று மாலை 2.30 மணிக்கு டண்டகமுவ வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருணாக்கல் கச்சேரி,
1934 ம் ஹூ (ஜூலை) ஆடிமீ 21 ந் உ.

என். ஈ. ஏர்ன்ஸ்ற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருணாக்கல் டிஸ்திறிக்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கன்சபாவ ரோட்டு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

படத்து இல. 218. இலக்கக் கடைசிக் கிராமப்படத்து 1 ம் அநுபந்தம். குருநாகல் வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் கற்றுகம்பொல ஹற்பத்துவில் மதப்பற்று கோறளை கிழக்கில் உள்ள கனுகல.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 30H1 | மாவிதஉப்பொத்தேவத்த .. | தரிசு நிலம் .. | கிரியுல்லவைச் சேர்ந்த டக்ரர். ஆர். ஈ. மென்டிஸ், | 0 | 0 | 5·4 |
| 32O1A | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 9·4 |
| 32D1A | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 17·4 |
| 32E1A | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 7·2 |
| 32P2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 6·6 |
| 32P3 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 1 | 1·7 |
| 32R1 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 12·8 |
| 33A | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 19 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தின்து 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934ம் ஞூ (ஓகஸ்ற்) ஆவணி மாசம் 21 ந் தேதியிலன்று மாலை 3.30 மணிக்கு குளியாப்பிட்டி வாடி வீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத்தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1934 ம் ஞூ ஆடி (ஜூலை)மீ 21 ந் உ.

என். ஈ. ஏர்ன்ஸ்ற்.
உதவி அரசாட்சி ஏசண்டு, குருநாக்கல டிஸ்திறிக்.

---

## கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்கள்.

*சாமான்கள் கொடுக்கிறதற்குக் கேள்விப்பத்திரம்.*

நார்க்கடகம், ஓலைப்பாய், ஓலைஉமல், பனைஓலை, என்னும் இந்தச் சாமான்கள் கேட்குநேரமே யாழ்ப்பாணம் உப்புமால், காரணவாய், வெல்லப்பரவை, சுவியாதெரு உப்பளம் தொண்டமனூர் உப்புக்குதம் ஆகிய இந்த இடங்களில கொடுக்கிறதற்கு 1934 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1935 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரையில் ஒப்பந்தம் கேட்க விரும்புபவருடைய கேள்விப் பத்திரம் ஏற்கப்படும்.

2. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியாகவும் முத்திரையிடப்பட்டதாயுமிருக்கவேண்டும். மூலப்பிரதி வடமாகாண ஏசன்றுத்துரை அவர்களுக்கும் இணைப்பிரதி கொழும்பு அரசிறை உப்பு ஆலோசனை கர்த்தருக்கு விலாசம் போட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் கேள்விக்காரன் தானாகக் கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம். இரண்டு பிரதிகளும் ஒரே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரத்தில் Tender for Supplying Materials, 1934–1935 என்று உறையின் இடதுபக்க மேல் மூலையில் போடப்பட்டிருத்தல் வேண்டும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1934 ம் ஆண்டு ஆவணி மாதம் 27 ந் திகதி பிற்பகல் 2 மணிக்குமுன் சேரவேண்டும்.

5. கேள்விப்பத்திரம் எழுத மாதிரிக்கடதாசி யாழ்ப்பாணக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அந்த மாதிரிக கடதாசியில் எழுதாத வேறு எவ்வித பத்திரமும் ஏற்கப்படமாட்டாது. மாற்றங்களுக்கு கையொப்ப முதலெழுத்து இடப்பட வேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரம் பிழையென விலக்கப்படும்.

6. கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டு காட்டினவருக்கே மாதிரிக்கடதாசி கொடுபடும். ஒருவருடைய ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொண்டதென்று அறிவித்தல் கொடுத்த நாள் தொடக்கம் பத்து நாளைக்குள் ஒப்பந்தம் ஏற்க பிணைகொடுக்க அல்லது உறுதிமுடிக்கத் தவறினால், கட்டின காசு கவண்மேந்துக்கு இனமாகும். அப்படித் தவறியவர் கவுண்மேந்து ஒப்பந்தம் கொடுக்கப்படாதென்று விலக்கப்பட்ட ஒப்பந்தக்காரருடைய பெயர் பதியப்படும் இடாப்பில் பதியப்படுகிறதற்காளாவர் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு முடிவானவுடன் மற்றக் கேள்விக்காரருடைய காசு திருப்பிக் கொடுபடும்.

7. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியானபேர் பிணை நிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அனைத்திருக்க வேண்டும். அவர்களுடைய மேல விலாசமும் காட்டியிருக்க வேண்டும்.

8. ஒப்பந்தம் கொடுக்கும் நாளில் கொடுக்கவேண்டிய சாமான்களுக்கு மாதிரிப்பொருட்களும் கொடுக்கவேண்டும்.

9. ஒப்பந்தத்தைச் சரியாய் ஒப்பேற்றுவதற்காகப் போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும். பிணையுறுதியின் தொகையும் வேறுவித தேவையான விபரங்களும் கந்தோரில் கேட்டுக்கொள்ளலாம்.

10. அரசாட்சியாரிடம் ஒப்பந்தம் எடுத்து அவ்வொப்பந்தத்தை நிறைவேறறத் தவறியவர்களுடைய டாப்பில் தனித்தேனும் மற்றவர்களுடன் ஒருமித்தேனும் காணப்படும் பேர்வழிகாரருடைய ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அன்றியும் ஒப்பந்தக்காரன் அந்த இடாப்பிலுள்ளவர்களில் யாரையாவது அல்லது வடமாகாண அரசாட்சி ஏசன்றார் தமக்குப் போதியதெனக் கண்ட நியாயங்களை எழுத்தில் கொடுத்துத் தடைநோத்தீசு கொடுப்பின அப்படித் தடைசெய்யப்பட்டவரைத் தம் ஊழியத்தில் உபயோகிக்கப்படாது.

11. மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

12. எந்தக் கேள்விப் பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயஞ்சொல்லாது மறுக்க முழு உருத்தும் கவுண்மேந்து ஏசண்டுக்குண்டு.

என். எம். டவ்,
அரசாட்சி ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1934 ம் ஞூ ஆடிமீ 23 ந் திகதி.

---

இத்தாலறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னுற சொல்லப்படும் துறை ஆயக்குத்தகை 1934 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1935 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரைக்கும் விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1934 ம் ஆண்டு ஆவணி மாதம் 20 ந் திகதி திங்கட்கிழமை மத்தியானம் 12 மணியளவில் ஏற்கப்படும்.

(1) பண்ணைத்துறை (2) அராலித்துறை
(3) காரைதீவு.

2. ரூபா 50 கச்சேரியில அல்லது திறைசேரியில் கட்டியதற்கு அத்தாட்சியாக பெற்றுக்கொண்ட றிசீட்டுடன் ஒப்பந்தப் பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபடவேண்டும். கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் தனது கேள்வியின்படி துறை ஆயக்குத்தகை விலைக்குக் கொடுக்கப்படுமென்று தீர்மானித்தவுடன கேள்வித்தொகையின் பத்திலொரு பங்கைக் கட்டவும் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடவும், அல்லது தேவையென்று காணும் பிணையைக் கேட்கும் நேரம் கொடுக்கவும் தவறினால் ஒப்பந்தக்கேள்விக்காகக் கட்டிய பணமும் கேள்வித்தொகையின் பத்திலொரு பங்கின்பேரால் கட்டிய பணமும் இழந்துபோவதுமன்றி தனது பெயரையும் குத்தகைப் பொருத்தங்களின்படி செய்யத் தவறியவர்களின் இடாப்பிலும் பதிவுசெய்வதற்கு ஏதுவாகும். ஒப்புக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையெழுத்திட்டபின் கேள்விக்காரர் கட்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்படும். தபால்

மார்க்கமாக அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்களும் குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பின் கிடைக்கும் கேள்விப்பத்திரங்களும் கவனிக்கப்படமாட்டாது. மேற்சொல்லிய ஒவ்வொரு குத்தகைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரம் அனுப்பப்படவேண்டும்.

3. ஒப்புக்கொள்ளப்படும் கேள்விக்காரன் கேள்வித் தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதி பெற்ற ஆதனைப் பிணையேனும் காசாய் கேள்வித் தொகையில் மூன்றிலொரு பங்கு பிணையேனும் கட்டவேண்டும்.

4. கவண்மேந்து ஏசண்டர் விற்பனவிலன்று தீர்மானிக்கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாகக் கேள்விக்காரன் கட்டவும் வேண்டும்.

5. முடிக்குரிய தரணி பிணையாகக் கொடுபடும் உறுதிமுதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதிபோடுவதற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும் செலவும் பிணை உறுதிக்கு ஒட்டவேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

6. பிணையாகக்கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடுமுதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

7. யாழ்ப்பாண ஏசண்டரிடம் தேவையான மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம். போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

8. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் நியாயஞ்சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவண்மேந்து ஏசண்டு அவர்களுக்கு உண்டு.

எஸ். எம். டவ்,
கவண்மேந்து ஏசன்றுக்கார.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1934 ம் ஆண்டு ஆடிமீ 23 ந் உ

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

இத்தால் சகலரும் அறிக, நுவரெலிய டிஸ்திறிக்கைச் சேர்ந்த கொத்மலே திஸ்பனையில் நவன்கம என்னும் கிராவாசியாகிய ஹொரபத்தெனிய வியனகே ஜேமிஸ் பிரேமதாஸ என்னும் நான் 1907 ம் ஆண்டின் கட்டளைச்சட்டத்தின 1 ம் பிரிவின் 1 B டாகிய ஜாபிதாவின் 2 ம் வகுப்புப்படி (In terms of rule 2 in Schedule 1 B to the Ordinance No 1 of 1907) இன்னும் (3) மூன்று மாதத்திறகுப்பின் வதுள்ளை (Badulla) பகுதியில் சிங்களப் பாஷையில் வேலைசெய்யும் பிரசித்த நொத்தாரிஸ் ஆக கடமை பார்க்கவும் முன்சொல்லிய சட்டத்தின் 6 ம் வகுப்பின்படி பதியப்படவும் அரசினர் பதிவுக் கந்தோர் தலைவருக்கு விண்ணப்பம் அனுப்ப இருக்கிறேன் என்பதை அறியவும்.

இப்படிக்கு,
எச். எல். ஜேமிஸ் பிரேமதாஸ.

நவன்கம,
1934 ம் ஆண்டு ஆடிமீ 13 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.